2006 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 129, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

129—

கால்நடை மருத்துவமனை

***1440—திருமதி ராணி வெங்கடேசன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரகுளம், ராமானுஜம் புதூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சேரகுளம் மற்றும் ராமானுஜம் புதூர் கிராமங்களில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.*

திருமதி ராணி வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருங்குளம் ஒன்றியத்தில் உள்ள சேரகுளம், ராமானுஜம் புதூரில் 2000-க்கும் அதிகமான மக்கள் வசிக்கிறார்கள். அவர்களில் அதிகமானவர்கள் விவசாயத் தொழிலே செய்கிறார்கள். அதனால் அங்கு அதிகமான கால்நடைகள் உள்ளன. அங்கு அவசியமாக ஒரு கால்நடை மருத்துவமனை தேவை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில், சேரகுளம் மற்றும் ராமானுஜம் புதூர் கிராமங்களின் அருகில் 4 கிலோ மீட்டர் தூரத்தில் மூலக்கரைப்பட்டு கிராமத்தில் ஒரு கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. அதேபோல,*

8 கிலோ மீட்டர் தூரத்தில் பேய்க்குளம் கிராமத்தில் ஒரு கால்நடைக் கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், கருங்குளம் ஊராட்சி ஒன்றியத்திலேயே 3 கால்நடை மருந்தகங்களும், 4 கால்நடைக் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. இந்த இரண்டு கிராமங்களிலும் 2 ஆயிரம் விவசாயிகள் இருந்தாலும், கால்நடைகளின் எண்ணிக்கை சுமார் 1,900 தான், சேரகுளம் கிராமத்திலுள்ளது; அதேபோல ராமானுஜம் புதூர் கிராமத்தில் 1,200 தான் உள்ளது. ஆதலால், இப்பொழுது அந்தச் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று அக்கிராமங்களுக்கு அருகில் உள்ள கால்நடை நிலையங்களில் பணிபுரியும் நம்முடைய கால்நடை உதவி மருத்துவரை அனுப்பி சிகிச்சைப் பணி மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி.

திரு. அ. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதியில் அரவட்லா, பாஸ்மார்பெண்டா பகுதிகள் அடர்ந்த காட்டுப் பகுதியிலே, பேரணாம்பட்டிலிருந்து 12 கிலோமீட்டர் தொலைவிலே இருக்கின்றன. மேலும், தரை மட்டத்திலிருந்து 500 மீட்டர் உயரத்திலே அந்தப் பகுதி இருக்கின்றது. அடர்ந்த காட்டுப் பகுதியிலே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு கால்நடை வளர்ப்பும், விவசாயமும்தான் முக்கியத் தொழிலாக இருக்கின்றது. அங்கு கால்நடை மருத்துவமனையை அல்லது துணை கால்நடை மருத்துவமனையை அமைத்தால், அந்த மக்கள் கால்நடைகளைப் பராமரிப்பதற்குப் பேருதவியாக இருக்கும். ஆகவே, அந்தக் காட்டுப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த மக்களுக்கு ஒரு துணை கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசு ஆய்வு செய்து உரிய முடிவு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.